1973 நவம்பர் 21]

தொகை மதிப்பீட்டை விட 25.2 விழுக்காடு அதிகமாக இருந்ததால் ஒப்பந்தப் புள்ளி நிராகரிக்கப்பட்டது. இரண்டாம் முறையாக ஒப்பந்தப் புள்ளிகள் கேட்டபோது, ஒருவரும் கேட்க முன்வரவில்லை. எனினும் ஊட்டி நகராட்சி ஆணையர் ஒப்பந்தப் புள்ளிகள் மறுபடியும் கேட்கத் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

வடார்க்காடு மாவட்டத்தில் நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்து வழித்தடங்கள்

*285 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-ம் ஆண்டில், வடார்க்காடு மாவட்டத்தில் அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து வழித்தடங்கள் எத்தனை ?

(இ) அந்த வழித் தடங்களில் அரசு பேருந்துகள் விடப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 14 வழித் தடங்கள்.

(இ) ஆம்.

திரு. கே. ஏ. வகாப் : அரசுடைமையாக்கப்பட்ட சில வழித் தடங்களில் சில தனியார் பஸ்கள் மறுபடியும் ஓடுகின்றன. அதற்குக் காரணம் என்ன ? இப்பொழுது எடுத்துக்கொள்ளப் பட்ட தனியார் பேருந்துகளுக்குப் பதிலாக விடும் அரசு பஸ்கள் மிகவும் பழமையானவாக இருக்கின்றன, குறிப்பாக சென்னை-வேலூர், வந்தவாசி-வேலூர் பஸ்கள் மாற்றப்பட்டு புதிய பஸ்கள் போடுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நாட்டுடமையாக்கப் பட்ட வழித் தடங்களில் மறுபடியும் தனியார் பஸ்கள் ஓடுவது கோர்ட்டாரின் தயவினாலே தவிர, அரசாங்கத்தினால் அல்ல. புதிய பஸ்களை விடுவது பற்றி எவ்வளவு தூரம் நடவடிக்கை எடுக்க முடியுமோ அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.